(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 79.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2025 செப்தெம்பர் 09, செவ்வாய்க்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1105/2025

கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய அரசாங்கம் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கென (RDA) 39 நிரந்தர பணிப்பாளர்களை நியமிப்பதற்கு கட்டங்கட்டமாக நேர்முகப் பரீட்சைகளை நடத்தியுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி நேர்முகப் பரீட்சைகளின் வாயிலாக, 05 மாகாண பணிப்பாளர்களையும் 34 பணிப்பாளர்களையும் தெரிவுசெய்து, பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக அதிகாரசபையின் தலைவர் ஆற்றுப்படுத்தியுள்ளார் என்பதையும்;

(iii) சுமார் ஆறு மாதங்கள் கடந்திருப்பினும், இதுவரை அந்த நியமனங்கள் வழங்கப்படவில்லை என்பதையும்;

(iv) மேற்படி அதிகாரசபையில் பல வருடங்களாக பணியாற்றுகின்ற ஊழியர்கள் ஓய்வுபெறவிருக்கும் காலம் அண்மித்துள்ள நிலையில் பதவி உயர்வை எதிர்ப்பார்ப்பதுடன் அத்தகைய எதிர்பார்ப்பு நியாயமானது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இதுவரை மேற்படி நியமனங்கள் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நியமனங்களை வழங்குவதில் தடைகள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(iii) அத்தடைகள் யாவை என்பதையும்;

(iv) அத்தடைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) மேற்படி நியமனங்களை வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதம் அரசாங்கத்தின் வினைத்திறனில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதை அறிவரா என்பதையும்;

(vi) மேற்படி நியமனங்கள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

1112/2025

கௌரவ ரொஷான் அக்மீமன,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின் அரசாங்க பாடசாலைகளில் கடும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றமையை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாகவும் பாடங்கள் வாரியாகவும் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1118/2025

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முனைப்பான சேவையில் ஈடுபட வேண்டியுள்ளபோதிலும், அங்கவீனமடைதல் காரணமாக முனைப்பான சேவையில் ஈடுபடாதுள்ள இராணுவ அங்கத்தவர் களுக்கு, அவர்களது அங்கவீனநிலையைக் கருத்தில் கொண்டு வழங்கப்படும் சலுகைகள்/ கொடுப்பனவுகள் யாவை;

(ii) குறிப்பிட்ட அங்கவீனமுற்ற இராணுவ அங்கத்தவர்களை மருத்துவக் காரணங்களுக்காக ஓய்வு பெறச் செய்யப்பட்டதன் பின்னர் அவர்கள் மரணமடைந்தால் அவர்களில் தங்கி வாழ்வோருக்கு வழங்கப்படும் சலுகைகள் / கொடுப்பனவுகள் யாவை;

(iii) மேற்படி சலுகைகள் / கொடுப்பனவுகள் போதுமானதா;

(iv) இன்றேல், மேற்படி சலுகைகள் / கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முனைப்பான சேவையில் ஈடுபட்டிருக்கும் அங்கவீனமுற்ற இராணுவ அங்கத்தவர்களை ஓய்வு பெறச் செய்வதற்கு முன்னர் அவர்கள் மரணிக்கும் பட்சத்தில், அவர்களில் தங்கி வாழ்வோருக்கு வழங்கப்படும் சலுகைகள்/ கொடுப்பனவுகள் யாவை;

(ii) அங்கவீனமடைதல் காரணமாக சேவைக்கு சமூகமளிக்காதிருந்த, பின்னர் சேவை அத்தியாவசியமில்லை எனும் அடிப்படையில் சேவையிலிருந்து அகற்றப்பட்டுள்ள இராணுவ அங்கத்தவர்களுக்கு அவர்களது அங்கவீன நிலையைக் கருத்தில் கொண்டு ஏதேனும் சலுகைகள்/ கொடுப்பனவுகள் தற்போது வழங்கப்படுகின்றனவா;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

(iv) அவர்களுக்கு சலுகையை/ கொடுப்பனவை வழங்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(v) ஆமெனில், அவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா;

(vi) மேற்படி நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

1158/2025

கௌரவ கிட்ணன் செல்வராஜ்,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்திலுள்ள எல்ல பிரதேச சபைக்குட்பட்ட கலுகல்ல தோட்டத்தின் மொத்தக் காணியில் ஒரு தேயிலைத் தோட்டமும் அதி சொகுசு பங்களாவும் அமைந்துள்ள 53 ஏக்கர் பரப்பளவினைக் கொண்ட ஒரு காணிப்பகுதியின் உரிமையாளர் இந்தியாவில் உள்ளார் என்பதையும்;

(ii) அந்தக் காணிக்கு போலி உரிமையாளர் ஒருவர் முன்வந்திருக்கின்றார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி காணியினுள் அத்துமீறி நுழைந்து தேயிலைக் கொழுந்து பறிப்பது சட்டவிரோதமானது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி காணியின் உரித்து நிர்ணயிக்கப்படாமையால், மேற்படி காணியை அரசுடைமையாக்க நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

1175/2025

கௌரவ மஞ்சுல சுகத் ரத்னாயக,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் அம்பாறை பிரதேச செயலாளர் பிரிவில், முறையே 1997, 1999, 2002 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட புனஸ்தாபன, திகாமடுலு ஜன உதான, நாமல் உயன மற்றும் திகாயுகம மற்றும் லோக ஜனாவாச தயாபுர ஆகிய வீடமைப்புத் திட்டங்களின் காணிகளை கையகப்படுத்தி உரிய பயனாளிகளுக்கு உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா;

(ii) அவற்றுள் புனஸ்தாபன, திகாமடுலு ஜன உதான மற்றும் லோக ஜனாவாச ஆகிய வீடமைப்புத் திட்டங்களுக்காக காணி பெறுனர்கள் பணம் சேகரித்து, அளவிட்டு, சம்பந்தப்பட்ட அறிக்கைகளை அதிகாரசபைக்குச் சமர்ப்பித்துள்ள போதிலும், இதுவரை காணி கையகப்படுத்தலுடன் தொடர்புடைய கோரிக்கைகள் அமைச்சு ஊடாக அம்பாறை பிரதேச செயலாளருக்கு அனுப்பப்படாததற்கான காரணங்கள் யாவை;

(iii) அக்காணிகளை கையகப்படுத்துவதற்கான கோரிக்கையை அமைச்சின் செயலாளர் ஊடாக அம்பாறை பிரதேசச் செயலாளருக்கு அனுப்புவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி வீடமைப்புத் திட்டங்களுக்கு மேலதிகமாக அம்பாறை மாவட்டத்தில் இதுவரை பயனாளிகளுக்கு உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படாத வீடமைப்புத் திட்டங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை யாவை என்பதையும்;

(iii) மேற்படி உறுதிப்பத்திரங்களை வழங்குவதில் தாமதம் நிலவுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

1178/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கிளிநொச்சி மாவட்டத்தில் —

(i) நிரந்தரமாக குடியிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களுக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) குடியிருக்கும் அறுதி உறுதிக் காணிப்பத்திர உரித்துடைய குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) குடியிருக்கும் காணி அனுமதிப்பத்திர உரித்துடைய குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) குடியிருக்கும் எனினும், இதுவரை அறுதி உறுதிக் காணிப்பத்திர உரித்தோ அல்லது அனுமதிப்பத்திரமோ இல்லாத குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) அனுமதிப்பத்திரத்துடனான வயற்காணிகள் மற்றும் மேட்டுக் காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில் 60 வருடங்களுக்கு மேலாக குடியிருக்கும் நபர்களுக்கு இதுவரையில் அறுதி உறுதிக் காணியுரித்து வழங்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) அறுதி உறுதிக் காணியுரித்து இன்றி வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் கடன் மற்றும் அடகுச் சேவைகளைப் பெற்றுக் கொடுக்காத காரணத்தினால் அவர்களால் தங்களது பொருளாதார முன்னேற்றத்தை அடைய முடியாதுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

1234/2025

கௌரவ அரவிந்த செனரத்,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) சட்டரீதியாக ஒப்பந்தங்களைச் செய்துகொண்டுள்ள நிறுவனங்கள் மாத்திரம் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை வழங்குகின்றனவா என்பதையும்;

(iii) சட்டரீதியாக ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளாத நிறுவனங்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை வழங்குவதாயின், அந்த நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை வழங்கும்போது, சட்டரீதியற்ற முறையில் வேலைவாய்ப்பு வழங்கும் அந்த நிறுவனங்கள் நிதி மோசடியில் ஈடுபடுகின்றனவா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அந்த நிறுவனங்களால் மோசடி செய்யப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) பணத்தை அறவிட்டுள்ளபோதிலும் வேலைவாய்ப்புகளை வழங்காதுள்ள நிறுவனங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

1236/2025

கௌரவ கே. காதர் மஸ்தான்,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வேப்பங்குளம் தொடக்கம் சிலாவத்துறை வரையான உள்ளக வீதி, 2010 ஆம் ஆண்டில் அப்போதைய மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சினால் புனரமைக்கப்பட்டமையை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி வீதியின் தூரம் யாதென்பதையும்;

(iii) மேற்படி வீதி எந்தக் கிராமத்தினூடாகப் பயணிக்கின்றதென்பதையும்;

(iv) மேற்படி வீதியின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் நிறைவு செய்யப்பட்ட திகதி வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை புனரமைக்கும் பணிகளுக்கு ஏதுவாக சம்பந்தப்பட்ட கம்பனியுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் பிரதியொன்றைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) உடன்படிக்கை எட்டப்பட்ட சந்தர்ப்பத்தில் குறித்த கம்பனியின் உரிமையாளர்கள் யாவர் என்பதையும்;

(iii) மேற்படி வீதியை புனரமைப்பதற்காக கம்பனிக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி வீதி புனரமைக்கப்படவில்லை என்பதையும் அதற்காக மோசடியான முறையில் பணம் பெறப்பட்டுள்ளதையும் அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1241/2025

கௌரவ திலிண சமரகோன்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தின் காணிகள், வருடாந்த அல்லது நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) இப்பலோகம மற்றும் கெக்கிராவை பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள காணிகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டு அவை குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி காணிகளின் அளவு மற்றும் அவை வழங்கப்பட்டுள்ள காலப் பகுதிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இல 519 - இஹலகாகம, இல 621 - இஹலகம மற்றும் இல 618 - கரம்பவத்தை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) அதற்காக குத்தகை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், சம்பந்தப்பட்ட தரப்புகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு காணியின் அளவு மற்றும் குத்தகை காலப்பகுதி வெவ்வேறாக யாவை என்பதையும்;

(v) அக்காணிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீளச் சுவீகரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) மேற்படி காணிகள் துணைக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(viii) அக் காணிகளைச் சுற்றி யானைத் தடுப்பு வேலிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(ix) அதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

1250/2025

கௌரவ நந்த பண்டார,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமானதும் கேகாலை மாவட்டத்தில் காணப்படுகின்றதுமான காணிகளின் அளவு எத்தனை ஹெக்டயர் என்பதையும்;

(ii) அத்தகைய காணிகளில், தற்போது கைத்தொழில்களுக்காக வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு யாதென்பதையும்;

(iii) அவ்வாறு ஒவ்வொரு காணியும் வழங்கப்பட்டுள்ள நபரின் பெயர் மற்றும் வழங்கப்பட்டுள்ள ஆண்டு வெவ்வேறாக யாது என்பதையும்;

(iv) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளில், இதுவரை எந்தவோர் அபிவிருத்தி நடவடிக்கைக்கும் பயன்படுத்தப்படாதுள்ள காணியின் அளவு எத்தனை ஹெக்டயர் என்பதையும்;

(v) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளுக்குப் பதிலாக மாற்றுக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) அவ்வாறு மாற்றுக் காணிகளைப் பெற்றுக்கொண்டுள்ள நபர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கும் இடையில் முதலீடுகளை மேம்படுத்தல் மற்றும் பரஸ்பர பாதுகாப்பு குறித்து, அவ்வெளிநாட்டு மக்களால் அல்லது அந்நாட்டின் சட்டங்களின் கீழ் நிறுவப்பட்ட அல்லது அமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்கள், நிறுவனங்கள் அல்லது ஏனைய அமைப்புக்களால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமென, 2025 பெப்ரவரி 12 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டதும் 2025.08.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது, தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்குமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

மத்தியஸ்தம் (குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

தேசிய கணக்காய்வு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவினத் தலைப்பு 123 - நிகழ்ச்சித்திட்டம் 02 — †2025 சனவரி மாதம் 01 ஆம் திகதியில் தொடங்குகின்ற மற்றும் 2025 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதியாண்டின் பயன்பாட்டிற்காக, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டிய நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான வேறு ஏதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணத்திலிருந்து அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தற்றுணிபின் பிரகாரம் அரசாங்கத்தால் பெற்றுக்கொண்ட ஏதேனும் கடன் தொகையில் இருந்து பதின்மூன்று பில்லியன் இருநூற்று எண்பத்தைந்து மில்லியன் அறுநூறு ஆயிரம் ரூபாய்க்கு (ரூபா. 13,285,600,000) விஞ்சாத மேலதிக தொகையை செலுத்த வேண்டுமென்றும் அத்தகைய தொகை இங்கே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு செலவிடப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

**அட்டவணை**

| | | | | |
|---|---|---|---|---|
| **தலைப்பு** | **123** - | நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் | | |
| **நிகழ்ச்சித்திட்டம்** | **02** - | அபிவிருத்தி நடவடிக்கைகள் | | |
| | | மூலதனச் செலவினம் | ரூ. | 13,285,600,000 |
| | | **மொத்தச் செலவினம்** | **ரூ.** | **13,285,600,000** |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2025 ஆகஸ்ட் 22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2025 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

*5.

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவினத் தலைப்பு 171 - நிகழ்ச்சித்திட்டம் 02 — †2025 சனவரி மாதம் 01 ஆம் திகதியில் தொடங்குகின்ற மற்றும் 2025 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதியாண்டின் பயன்பாட்டிற்காக, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திடம் உள்ள வேறு ஏதேனும் நிதியம் அல்லது நிதிகளிலிருந்து அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் விருப்பப்படி அரசாங்கத்தால் பெறப்பட்ட ஏதேனும் கடனிலிருந்து ஆயிரத்து ஐநூறு மில்லியன் ரூபாயினை (ரூபா 1,500,000,000) விஞ்சாத மேலதிக ஒரு தொகை செலுத்தப்பட வேண்டுமென்றும் அத்தகைய தொகை இங்கே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு செலவிடப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

**அட்டவணை**

| | | | | |
|---|---|---|---|---|
| **தலைப்பு** | **171** - | மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் | | |
| **நிகழ்ச்சித்திட்டம்** | **02** - | அபிவிருத்தி நடவடிக்கைகள் | | |
| | | மீண்டெழும் செலவினம் | ரூ. | 1,500,000,000 |
| | | **மொத்தச் செலவினம்** | **ரூ.** | **1,500,000,000** |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2025 ஆகஸ்ட் 22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2025 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

1 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 13,285,600,000 ஆகும்.

*6.

சனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

தேசியக் கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் — குழு ஆய்நிலை.

*10.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— "2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**